**தலைப்பு – 119 – மின்வலு, சக்தி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மின்வலு, சக்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். ஆவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மின்வலு, சக்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (உ) வரை காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் வாகனங்கள் தொடர்பான சகல விபரங்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சிற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 28,550,149,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 21,381,068,532 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 7,169,080,468 தொகை அதாவது 25 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழும் | 1,087,399,000 | 710,466,613 | 376,932,387 | 35 |
| மூலதனம் | 27,462,750,000 | 20,670,601,919 | 6,792,148,081 | 25 |
| மொத்தம் | 28,550,149,000 | 21,381,068,532 | 7,169,080,468 | 25 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 24 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,384,519,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

- 23 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 8,851,040 ஆக இருந்தது. நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக அந்த நிதிஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 6,395,193 இனால் மிகைத்து ரூபா 15,246,233 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11901 | 5,000,000 | 2,960,963 | 2,400,000 | 2,988,753 | 20,000,000 | 10,527,579 |

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 13,442,220 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 8,065,332 தொகை 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 879,687 ஆக இருந்ததுடன் அந்த மீதிகளில் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 197,523 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சின் தூரநோக்கு, பிரதான பணிகள் மற்றும் இலக்கிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய பீஎப்/402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | | |
| (i) 2.1 ஆம் பந்தி | 473,232 | சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்ட பதவிகளுக்கு புறம்பாக ஏனைய பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணியில் சேவையில் ஈடுபடுத்தியமை. |
| | 13,293,768 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணியில் மிகையாக 44 உத்தியோகத்தர்களை நியமித்தல். |
| (ii) 3.1 ஆம் பந்தி | | அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக் காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆக இருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் |

| | | |
|---|---|---|
| | | அமைச்சருக்காக 06 வாகனங்களும், பிரதி அமைச்சருக்காக 05 வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுச் செயலாளரின் 2009 மார்ச் 24 ஆந் திகதிய மற்றும் 2010 யூலை 02 ஆந் திகதிய என்எஸ்சீசீ/2/1/6/1/1/1-II ஆம் இலக்க கடிதம் | 401,176 | அமைய எழுதுவினைஞர்களை மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தி அதற்காக மேலதிக நேரக் கொடுப்பனவுகளை செலுத்துதல். |
| (இ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை<br>--------------------------------------<br>2010 ஏப்ரல் 29 ஆந் திகதிய 146 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | - | அமைச்சின் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஒரு இடத்தில் இருக்கும் வகையில் அமைச்சு அமைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களில் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) முறையான அங்கீகரமின்றி அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்ட அதிகாரசபைக்குச் சொந்தமான சாரதிகளின் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 367,942 தொகையும், 2010 மே முதல் 2012 திசெம்பர் வரை ரூபா 1,457,030 தொகையும் அமைச்சின் கட்டளையின் படி சபையினால் அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சினால் சபையிலிருந்து 2006 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 6,142,276 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 13 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 111 | 51 | 60 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 46 | 35 | 11 | - |
| (v) | ஏனையவை | - | 14 | - | 14 |
| | மொத்தம் | 178 | 114 | 78 | 14 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 78 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சேர்க்கப்பட்ட மிகை ஊழியர்களின் எண்ணிகை 14 ஆக இருந்தது.

### (ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் முறையற்ற வகையில் பெறப்பட்ட மனித வளங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முறையான அங்கீகாரமின்றி சபையின் 24 உத்தியோகத்தர்கள் அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்காக சபையினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 20,074,851 தொகை சம்பளமும் படிகளும் மற்றும் ரூபா 1,488,106 தொகையான ஊக்குவிப்புப் படியும் செலுத்தப்பட்டிருந்தன.